**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– 43–வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சி– 2016–17 ஆம் நிதியாண்டு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் தனி அரங்கம் அமைக்க அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.06

நாள்: 31–01–2017
துன்முகி, தை 18,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை(1டி) எண்.13, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்10–02–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.5326/பு.இ.அ/2016, நாள் 06.10.2016 மற்றும் 03.01.2017.
3. அரசாணை(நிலை) எண்.268, சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை, நாள் 10–11–2016.

–––––––

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை மூலம் நடத்தப்படும் 42–வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் முந்தைய ஆண்டை போலவே, 2015–16ம் நிதியாண்டிலும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக தனி அரங்கம் அமைத்திடவும், உபகரணங்கள், விளம்பரப் பலகைகள், புகைப்படத் திரட்டு, மற்றும் செயல் திட்டம் குறித்த பலகைகள் தயாரித்து, பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் சிறப்பாக செயல்படுத்த, ரூ.4.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட 03.01.2017 நாளிட்ட கடிதத்தில், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை மூலம் நடத்தப்படும் 43–வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் சென்ற ஆண்டைப் போலேவே நடப்பு 2016–2017 ம் நிதியாண்டிலும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக தனி அரங்கம் அமைத்திடவும், விளம்பர பலகைகள், புகைப்படத் திரட்டு உபகரணங்கள் மற்றும் செயல் திட்டம் குறித்த பலகைகள் தயாரித்து பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறப்பாக செயல்படுத்திட ஏதுவாக தொடராணையும், ரூ.4.68 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2016–17 ஆம் நிதியாண்டிற்கு 43–வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சி நடத்த அனுமதியும் மற்றும்

அரங்கங்கள் அமைக்க நிர்வாக அனுமதி அளித்துள்ளது. அவ்வாணையில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக தீவுத் திடலில் தனி அரங்கம் ரூ.4,68,000/– செலவில் அமைத்திட நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும். இவ்வாணையில் இதற்கான நிதி ஒப்பளிப்பினை சம்மந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளால் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** மேற்காணும் சூழ்நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை ஏற்று, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் தனி அரங்கம் அமைத்திடவும், உபகரணங்கள், விளம்பரப்பலகைகள், புகைப்படத்திரட்டு மற்றும் செயல் திட்டம் குறித்த பலகைகள் தயாரித்து, பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் சிறப்பாக செயல்படுத்திட ரூ.**4.68** இலட்சம் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், இதற்கான செலவினத் தொகை ரூ.**4.68,000/–** (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபத்தெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

> "**2235**–சமூகப் பாதுகாப்பும் நலனும்–**02**. சமூக நலன் –**001** நெறிப்படுத்தலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது AF. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம்–**08**. விளம்பரமும் பிரச்சாரமும்–**02**. பொருட்காட்சி".
> (கு.தொ.கு. **2235 02 001** AF 0821)

**6.** மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட இச்செலவினத்தினை மேற்கொள்ள மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.3274/நிதி(சந)/2017, நாள் **26.01.2017**–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**78.**
முதன்மை மாநில கணக்காயர்,சென்னை–**18** (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–**35.**
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை–**2.**
**நகல்:–**
நிதி (சந)த் துறை, சென்னை–**9.**
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை,சென்னை–**9.**
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.